## வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கா நனோரெக்னோலொஜி இன்ஸ்ரிரியூட் (தனியார்) கம்பனி – 2016/2017

---

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கா நனோரெக்னோலொஜி இன்ஸ்ரிரியூட் (தனியார்) கம்பனியின் ("கம்பனி") 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமைய இந்த அறிக்கை வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கா நனோரெக்னோலொஜி இன்ஸ்ரிரியூட் (தனியார்) கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.1.1 விடயத்தினை முக்கியத்துவப்படுத்துதல்

எனது அபிப்பிராயத்தை முனைப்பழிவு செய்யாமல் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு தொடர்பான நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல 28 தொடர்பாக எனது கவனத்தை செலுத்துகின்றேன்.

### 2.1.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்:

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) எனது அபிப்பிராயத்தில் :

- கணக்காய்விற்கு அவசியமானதும், இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றிருக்கின்றேன் என்பதும், மற்றும்

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

எவ்வாறாயினும், 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் தேறிய சொத்தானது கூறப்பட்ட மூலதனத்தில் அரைவாசியை விட குறைவாக காணப்படுகின்றமை மீது கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் 2007 ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 220 ஆம் பிரிவின் பிரகாரம் மூலதனத்தின் தீவிர நட்டத்தை எதிர்கொள்கின்றது. இந்நிலமையினை குறைப்பதற்கு கம்பனி எடுத்த நடவடிக்கையினை நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இல 29 விபரிக்கின்றது.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனி அதன் சொத்துக்களினை பயன்படுத்துவதற்கு காணப்பட்ட திகதியினை கருத்திற் கொண்டிருப்பதற்குப் பதிலாக கொள்வனவு செய்யப்பட்ட மாதத்தின் முதல் நாளிலிருந்து பெறுமானத்தேய்விட்டிருந்தது. அதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 1,033,846 இனால் மிகையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வு காலப்பகுதிக்கான உண்மையான வரிப் பொறுப்பு ரூபா 5,067,235 ஆகக் காணப்பட்டபோதிலும், அது ரூபா 4,975,019 ஆக நிதிக்கூற்றுக்களில்

காட்டப்பட்டிருந்தது. ஆகையினால், மீளாய்வு காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களில் வருமான வரிக்கான ஏற்பாடு ரூபா 92,216 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இனங்காமைகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 9.2 (உ) பிரிவு | நிறுவன அமைப்பு வரைபடம் மற்றும் கம்பனியின் பதவியணியினர் என்பவற்றிற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 9.3.1(i) ஆம் பிரிவு | கம்பனியின் ஆட்சேர்ப்புத்திட்டம் மற்றும் பதவியுயர்வுகள் (எஸ்ஓஆர்) பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் சம்பந்தப்பட்ட அமைச்சினால் அங்கீகரிக்கபட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 237(ஆ) | பண்டங்கள் பெறப்பட்டிருந்தமைக்கான சான்றுப்பத்திரம் மற்றும் அவை பொருத்தமான இருப்புக்களுக்குள் கட்டணங்களுடன் கொண்டுவரப்படுகின்றமை என்பன களஞ்சிய விநியோகங்களுக்கான செலுத்துகைகளினை மேற்கொள்வதற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 8 உள்ளுர் கொள்வனவுகளிலிருந்து களஞ்சியத்திற்கு ரூபா 14,705,584 பெறுமதியுடைய பொருட்கள் பெறப்படுவதற்கு முன்னர் 50 சதவீதம் தொடக்கம் 70 சதவீதம் வரையான வீச்சிற்கிடைப்பட்ட முற்பணங்களினை கம்பனி செலுத்தியிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகளிலிருந்தான வரிக்கு முன்னரான தேறிய இலாபம் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய நட்டம் ரூபா 144,708,235 உடன் ஒப்பிடும் போது ரூபா 131,961,978 வரிக்கு முன்னரான நட்டத்தினை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டின் போது நிதிசார் விளைவுகளில் ரூபா 12,746,257 ஆன முன்னேற்றத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டில் காப்புரிமைகளின் விற்பனையிலிருந்து வருமானம் பெறப்பட்டமை நிதிசார் விளைவுகளில் இந்த மிதமான முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக தாக்கமளித்திருந்தது. மேலும், 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் திரண்ட நட்டம் ரூபா 778,477,641 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் இது ரூபா 106,905,072 இனால் அதிகரித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளினை பகுப்பாய்கையில், 2012/2013 ஆம் ஆண்டிலிருந்து தேறிய நட்டம் தொடர்ச்சியாக அறிக்கையிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஊழியர்களின் ஊதியங்கள், அரசுக்கு செலுத்தப்பட்ட வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு என்பவற்றை கணக்கிற்கு எடுத்த பின்னர், 2014/2015 ஆம் ஆண்டைத் தவிர, கம்பனியின் பெறுமதிச் சேர்க்கையில் சாதகமானதொரு நிலைமை காணக்கூடியதாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வு காலப்பகுதிக்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், தனியார் தரப்பினர்களின் நிதிகளினைப் பயன்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் மற்றும் ஒதுக்கங்களினை அது உள்ளடக்கியிருக்கவில்லை.

(ஆ) கம்பனி ஐந்து மற்றும் ஆறு மாதங்கள் செயற்திட்ட வெளிப்படுத்தல் காலப்பகுதிகளுக்கு இரண்டு தனியார் கம்பனிகளுடன் இரண்டு ஆராய்ச்சி உடன்படிக்கைகளினை ஏற்படுத்தியிருந்தது. இந்த நோக்கத்திற்கு இணங்கியதாக கம்பனிக்கு ரூபா 3,091,693 இனை அந்த தனியார் கம்பனிகள் செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், இணங்கப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டங்களினை பூர்த்தியாக்க தவறியமை காரணமாக, இது தொடர்பில் ரூபா 4,446,321 மேலதிக கிரயமொன்று கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது.

(இ) அரச நிதிகளின் ரூபா 79 மில்லியன் கிரயமொன்றில் இல்மனைற்று மணலிலிருந்து டைட்டானியத்தினை பிரித்தெடுப்பதற்கான கிரய வினைத்திறனானதொரு செயன்முறையை அபிவிருத்தி செய்வதற்கான ஆராய்ச்சி செயற்திட்டமொன்றை கம்பனி வெற்றிகரமாக பூர்த்திசெய்திருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உள்ளூரில் அல்லது சர்வதேசரீதியில் விளைவுகளினை வர்த்தகமயமாக்குவதற்கு கம்பனிக்கு முடியாதிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகைக்குழு ரூபா 10,225,266 பெறுமதியுடைய உபகரணங்களினைக் கொள்வனவு செய்வதற்கு 2016 செப்தம்பர் 20 இல் அதன் அங்கீகாரத்தினை வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், 2018 ஏப்ரல் இறுதி வரையிலும் அவ்வாறான உபகரணங்களினை கொள்வனவு செய்வதற்கு கம்பனி தவறியிருந்தது.

(ஆ) உயிரியல் ஆய்வுகூடத்தின் பயன்பாட்டிற்கு ரூபா 17,510,343 பெறுமதியான 16 உபகரணங்களினை கம்பனி கொள்வனவு செய்திருந்தது. எவ்வாறாயினும், 2018 பெப்ரவரி இறுதி வரையிலும் அந்த உபகரணத்தை நிறுவுவதன் மூலம் உயிரியல் ஆய்வுகூடம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக்

கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | **கட்டுப்பாட்டுப் பரப்புக்கள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| (அ) | வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் | அறவிடப்பட்டிராது கணக்குகளில் நீண்டகால நிலுவையாகவுள்ள மீதிகள் தொடர்ந்தும் காணப்படுகின்றமை. |
| (ஆ) | வரி முகாமைத்துவம் | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (என்பீரி) மற்றும் முத்திரை வரியினை அனுப்புவதில் தாமதம். |
| (இ) | கொடுப்பனவுகளின் மீதான கட்டுப்பாடு | மாற்றஞ்செய்யப்பட்ட செலுத்துகை உறுதிச் சீட்டுக்கள் மற்றும் நகல் உறுதிச்சீட்டு இலக்கங்கள் காணப்படுகின்றமை. |